# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங் கப் பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg



| | |
|---|---|
| **பங் குத் தந் தை:** அருட் திரு மைக் கேல் சீத் தாராம் frmichaelsitaram@gmail.com | **உதவிப் பங் குத் தந் தை:** அருட் திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங் குத் தந் தை:** அருட் திரு தே. நித் திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங் கு அலுவலகம் :***ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |



| | | |
|---|---|---|
| **29 டிசம்பர் 2019** | **திருகுடும்பம் பெருவிழா** | **முதல் ஆண்டு** |



## நன்றியின் விழா - பொங்கள் விழா கொண்டாட வாரீர்

வாழ்வின் விளைவின் காணிக்கையை கடவுளுக்கு நன்றிபலியாக்க வாரீர். அப்போஸ்தலர்கள் இயேசுவோடு இணைந்து ஒப்புக்கொடுத்தது போல், 24 பொங்கள் பானைகளை அடையாளமாக்கி 19-01-2020 அன்று மாலை 4.30 மணிக்கு நமது ஆலயத்தில் நன்றி பலியாக ஒப்புக் கொடுப்போம். தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

எல்லோருக்கும் விலைமதிப்பில்லாத இயேசுவின் பொங்கள் பானையுடன் இணைந்து கொண்டாட வாய்ப்பு உண்டு. எனவே விரும்புவோர், பங்கு அலுவலகத்தில் உங்கள் காணிக்கையாக 100 வெள்ளிகள் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளவும்.







## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு

அன்பார்ந்தவர்களே! பல்வேறு நிதிசேகரிப்பு நடவடிக்கைகள் மூலமாக, நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்காக **இதுவரை** S$ 4.3 **மில்லியன்** சேர்க்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். மனமுவந்து நன்கொடையளித்த உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்களது நன்றிகள்! நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்குத் தேவையான முழுத் தொகையான S$ 6.2 **மில்லியனை** அடைவதற்கு தொடர்ந்து உங்கள் தாராள மனதையும், செபங்களையும் வேண்டி நிற்கின்றோம்.



## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்

பள்ளி விடுமுறை காரணமாக இவ்வாரம் தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறாது. புதிய ஆண்டுக்கான தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள், 12-01-2020 முதல் ஆரம்பமாகும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.




## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில்** இரவு 8:30 மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!



## நற்கருணை ஆராதனை வழிபாடு

**05-01-2020 ஞாயிறு மாலை 5:00 மணி**

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக் கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காகவும் செபிக்கவும் உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

11-01-2020 **சனிக்கிழமை, இரவு** 9:30 **முதல் காலை** 5:30 **வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, இறைவனின் அன்பை சுவைக்கவும், அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாடவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.




## புதுவருட திருப்பலி நேரங்கள்

31-12-2019, **செவ்வாய்:** மதியம் 12:30 மணி (ஆங்கிலம்)

31-12-2019, **செவ்வாய், புத்தாண்டு திருப்பலி:**
இரவு 9 மணி திருப்பலி (ஆங்கிலம்)
**இரவு 11 மணிக்கு தமிழில் நன்றி ஆராதனை, இரவு 11:30 மணிக்கு திருப்பலி (தமிழ்)**

01-01-2020, **புதன், புது வருட தினம்:** காலை 9 மணிக்கு திருப்பலி (ஆங்கிலம்),
**காலை 10:30 மணிக்கு திருப்பலி (தமிழ்)**

**குறிப்பு:** 01-01-2020 பொது விடுமுறை
புதுவருட தினத்தில் அனைத்து திருப்பலிகளும் முடிவடைந்ததும், நம் ஆலய வளாகத்தின் இரும்புக் கதவுகள் பூட்டப்படும். பொது விடுமுறை தினங்களில் நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

நமது பங்குத் தந்தை அருட்திரு. மைக்கல் சீத்தாராம், உதவிப்பங்குத் தந்தையர்கள் அருட்திரு. நித்திய சகாயராஜ் மற்றும் அருட்திரு. பால் இயோ சார்பில் உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான **புதுவருட வாழ்த்துக்கள்!**

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| முதல் வாசகம்: | சீராக்கின் ஞானநூல் 3:2-7.12-14ய |
| பதிலுரைப்பாடல்: | திருப்பாடல் 128: 1-2.3. 4-5 |
| பதிலுரை: ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடப்போர் பேறுபெற்றோர். | |
| இரண்டாம் வாசகம்: | கொலோசையர் 3:12-21 |
| வாழ்த்தொலி: அல்லேலூயா, அல்லேலூயா! கிறிஸ்து அருளும் அமைதி உங்கள் உள்ளங்களை நெறிபடுத்துவதாக! கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தி உங்களுக்குள் நிறைவாகக் குடிகொள்வதாக!அல்லேலூயா. | |
| நற்செய்தி வாசகம்: | மத்தேயு 2:13-15 19-23 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட் கள் (ஆங் கிலம் ) : | மதியம் 12:30 &மாலை 6:30 மணி |
| சனி (ஆங் கிலம் ) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங் கிலம் ) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ் ) : | காலை 9:30 &மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி(ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங் கிலம் | வார நாட் களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங் கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள் ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத் தோலிக் க அருங் கொடை : | வெள் ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர் வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர் து அன் னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட் சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ் வாய் மாலை 4:30 மணி |
| | குழந் தை இயேசு நவநாள் : | செவ் வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக் கச் செபம் : | வெள் ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன் னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத் தின் 23ம் தேதிஇரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:**உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

God Bless You